குரோஷியா



வளருவதற்கான இடம்

அந்த எண்ணம் அவனை விட்டுப் போகவில்லை. அது மேலும் வளர்ந்தது.

லியோன் முதன்முதலில் மருஷேவெக்கில் வேதாகம முகாமிற்குச் சென்றபோது அவனுக்கு ஏழு வயது. அவனுடைய பெற்றோர்களும் சிறு பிள்ளைகளாக இருந்தபோது இதே முகாமிற்குச் சென்றிருந்தார்கள். 1972 ஆம் ஆண்டு முதல் அந்த முகாம் நடந்து வருகிறது; குரோஷியா முழுவதும் உள்ள அட்வென்டிஸ்ட் குடும்பத்தினர் கோடைக்காலத்தில் அந்த முகாமில் கலந்துகொள்வது பாரம்பரியமாக நடந்துவருகிறது.

லியோன் கலந்துகொண்ட அந்த முதல் வாரம் அனைத்தையும் மாற்றியது.

"அங்கே 50 முதல் 100 சிறுவர்கள் இருந்தனர், ஒவ்வொரு நாளும் வேதவகுப்பும், பயிற்சிப் பட்டறைகளும், பாடல் பாடுதலும், புகைப்படம் எடுத்தலும், விளையாட்டுகளும் இருந்தன. ஒவ்வொரு நாளும் இரவு உணவிற்குப் பிறகு ஆராதனை நடைபெறும்" என்று சொல்கிறான்.

ஆனால் அவனுக்கு அதிகம் பிடித்திருந்தது பேஸ்பால் விளையாட்டுதான்.

அது அமெரிக்க பேஸ்பால் போன்றதல்ல; குரோஷியாவில் விளையாடப்படுகிற ஒரு வகை பேஸ்பால். டென்னிஸ் பந்துகளால் தற்காலிகமாக உருவாக்கப்பட்ட தளங்களில் விளையாடுவார்கள், மைதானத்தில் கூடியிருப்பவர்களுக்கு மிகவும் வேடிக்கையாக இருக்கும், ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலான ஒரு பாரம்பரியமாக அந்த விளையாட்டு நடைபெற்று வருகிறது.

''ஒவ்வொரு நாள் மாலையும் ஒன்பது மணி வரை விளையாடு வோம், அதுதான் அந்த முகாமின் மிக முக்கியமான விஷயம்!'' என்று லியோன் கூறுகிறான்.

ஒவ்வொரு வாரத்தின் நிகழ்ச் சிகளும் சிறுவர்களின் ஓய்வுநாள் நிகழ்ச்சியுடன் நிறைவுபெறும். அச் சிறுவர்கள், பாடல்கள் பாடுவார் கள், நாடகங்கள் போடுவார்கள், தங் கள் பிள்ளைகள் கற்றுக்கொண்ட காரியங்களைப் பார்க்க வந்த பெற் றோருக்கான ஆராதனை விளக்கக் காட்சிகளைக் காட்டுவார்கள். மேலும் ஒவ்வொரு ஆண்டும், அட் வென்டிஸ்ட் அல்லாத தங்கள் நண் பர்களையும் சிறுவர்கள் அங்கு அழைத்து வருவதுண்டு.

கடந்த ஆண்டு, அந்த முகா மில் மூன்று இளைஞர்கள் ஞானஸ் நானம் பெற்றனர்; அதில், இரண்டு அட்வென்டிஸ்ட் இளைஞர்களும், விருந்தினராக வந்த ஒருவரும் அடங் குவர். அந்த முகாமில் வெறும் விளையாட்டுகள்மட்டும் நடப்ப தில்லை. அங்கே விசுவாசத்தை செயலில் வெளிப்படுத்தினார்கள். அது லியோனின் இதயத்தில் ஆழ மான தாக்கத்தை உண்டாக்கியது.

2018 ஆம் ஆண்டில் மருஷே வெக்கில் உள்ள உயர்நிலைப் பள்ளி யில் உடலியக்க மருத்துவப் படிப் பில் சேர்ந்தபோது, வேறு சில விஷ யங்களும் மாறியிருந்தன.

முந்தைய பதின்மூன்றாவது வார ஓய்வுநாள் காணிக்கையின் உதவியால் புத்தம் புதிய மாணவர் விடுதி அப்போதுதான் திறக்கப்பட் டிருந்தது.

''அது மிகவும் தனித்துவமாகக் கட்டப்பட்டிருந்தது, சாவிகளால் அல்ல, அடையாள அட்டைகளால் கதவுகளைத் திறக்கிற நவீன வசதி யுடன்கூடிய கட்டிடம். அது ஒரு ஹோட்டல்போல இருந்தது'' என்று லியோன் கூறுகிறான்.

பழைய விடுதியில் ஒவ்வோர் அறையில் நான்கு மாணவர்கள் தங் கலாம். புதிய விடுதியானது, ஓர் அறைகளில் இரண்டு பேர் மட்டுமே தங்குகிற வகையில் கட்டப்பட்டிருந் தது. புதிய அறைகளில் குளிர்சாதன வசதி, நவீன மரச்சாமான்கள் மற்றும் இரண்டு அறைகளுக்கு இடையே ஒரு பொதுவான குளியலறை ஆகி யவை இருந் தன.

அது நவீனமாக, சுத்தமாக, வசதியாக இருந்தது. மேலும் மாண வர் மன்றமானது அந்த விடுதியுடன் இணைக்கப்பட்டிருந்தது.

அருகிலேயே கூடைப்பந்து மற்றும் கைப்பந்து மைதானங்கள் இருந்தன; இவை இயல்பாகவே நட்புகள் உருவாகும் இடங்களாக மாறின. லியோனின் தலைமுறை யினருக்கு, அந்தப் புதிய விடுதி வெறும் ஒரு கட்டிடம் மட்டுமல்ல, அது ஒரு வீடாகவே இருந்தது.

சில மூத்த மாணவர்கள் பழைய விடுதியின் நினைவுகளில் மூழ்கி யிருந்தனர். ஆனால் புதிய விடுதி யில் வளர்ந்தவர்களுக்கு, அது மாண வர் வாழ்க்கையின் மையமாக மாறி யது. படிப்பதற்கும், சிரிப்பதற்கும், நம்பிக்கையைப்பற்றி பேசுவதற்கும் மற்றும் ஒரு சமூகத்தை உருவாக்கு வதற்கும் உரிய இடமாக அது விளங் கியது.

தொழில்முறைப் பயிற்சிக்காக வந்த மாணவர்களும் ஒரு சொந்த பந்த உணர்வை அங்கே பெற்றுக் கொண்டார்கள்.

சிறுவனாக இருந்தபோது, லியோன் ஒருமுறை தனது ஆரம் பப்பள்ளி தலைமை ஆசிரியரிடம், ''வார நாட்களில் நான் கற்செதுக் கும் கலைஞனாக வேலைசெய்ய வும், ஓய்வுநாளில் போதகப்பணி செய்யவும் விரும்புகிறேன்'' என்று கூறியிருந்தான்.

ஆனால் உயர்நிலைப் பள்ளி யில், அவனுக்கு விளையாட்டுகள், உடற்கூறியல் மற்றும் மனித உடல் குறித்து படிப்பதில் ஆர்வம் ஏற்பட் டது. இதனால் உடலியக்க மருத்து வம் படிப்பதே அவனுக்குச் சரியான தாகத் தோன்றியது. அந்தப் படிப்பை முடித்து, அடுத்தகட்ட உயர் கல்விக் குச் செல்லவும் நன்கு தயாராக இருந் தான்.

ஆனாலும், லியோன் உயர் நிலைப் பள்ளியின் கடைசி ஆண் டில் இருந்தபோது, ஒரு பழைய எண் ணம் மீண்டும் மெதுவாக அவனுக் குள் எட்டிப்பார்த்தது.

''அந்த எண்ணம் எப்போது உருவானது என்று தெரியவில்லை. ஆனால் நான் மீண்டும் போதகப் பணிபற்றி யோசிக்கத் தொடங்கி னேன்'' என்று சொன்னான்.

அந்த எண்ணம் அவனை விட் டுப் போகவில்லை. அது மேலும் வளர்ந்தது.

லியோன் தனது பேராசிரியர் களிடம் அதுபற்றிப் பேச ஆரம்பித் தான். தனது பெண்தோழியிடமும், பெற்றோரிடமும் பேசினான். அதற் காக ஜெபித்தான், சிந்தித்துப் பார்த் தான். அவனுக்குள் இருந்த அந்த அழைப்பின் உணர்வு மேலும் தெளி வாகியது.

அவன் மருஷேவெக்கில் இறை யியல் படிப்பில் சேர்ந்து, இளங் கலைப் பட்டத்தை முடித்தான். இன்று 24 வயதாகும் லியோனுக்கு திருமண மாகிவிட்டது, போதகர் பயிற்சி மாண வனாகப் பணியாற்றி வருகிறான்.

ஆனாலும் அந்த வேதாகம முகாம்மட்டும் இன்னும் மறக்கமுடி யாத ஒரு நினைவாகவே உள்ளது.

கடந்த சில ஆண்டுகளில், மீண் டும் அங்கு சென்றான்; முதலில் சிறு பிள்ளைகளுக்கான ஒரு ஆலோச கராகவும், பின்னர் ஒரு வேதாகம ஆசிரியராகவும், அதன் பிறகு ஒரு விரிவுரையாளராகவும் சென்றான்.

குரோஷியா மற்றும் ஸ்லோ வேனியா முழுவதும் உள்ள பதின்ம வயது சிறுவர்களுக்காக வார இறுதி யில் நடத்தப்படுகிற 'டீன் கனெக்ட்' என்கிற ஆவிக்குரிய முகாமைத் தொடங்கவும் வழிநடத்தவும் உதவி னான். ஏனெனில் அங்கு சிறுவர் களுக்காக பல திட்டங்கள் இருந்த போதிலும், குறிப்பாக பதின்ம வய தினருக்காக மிகச் சில திட்டங்களே இருந்தன.

''நாங்கள் எப்போதும் சமூகப் பணிச் செயல்பாடுகளையும் இதில் சேர்த்துக் கொள்கிறோம், முதியோர் இல்லங்களுக்குச் செல்வது, வளா கத்தைச் சுத்தம் செய்வது, மற்றும் ஆவிக்குரிய புத்தகங்களை விநியோ கிப்பது போன்றவை அந்தத் திட்டங் களில் அடங்கும்'' என்று கூறுகி றான்.